2018 ஜூன் 13]

(ஆ) நாகப்பட்டினம், திருக்கண்ணபுரம் அருள்மிகு சவுரிராஜ பெருமாள் கோயில் குடமுழுக்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்சாரி, என்ன? சொல்லுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாகத் தகவல் கோரல் ஒன்று கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுதான் இன்றைக்கு இந்து சமய அறநிலையங்கள் துறை குறித்த மானியம் வருகிறது. எந்தக் கோயில் என்று சொல்லுங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார் என்று கேட்போம்.*

முற்பகல் 11–45

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமுதாய மக்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்களுடைய கிராமங்களிலே கோயில் கும்பாபிஷேகம் நடத்துவார்கள். அப்படி நடத்த முடிவெடுக்கக்கூடிய தருணங்களிலே, அந்த ஊரைச் சார்ந்த செல்வந்தர்களும், இறை நம்பிக்கையாளர்களும் நிறைய செலவு செய்யத் தயாராக இருக்கிறார்கள். இந்து சமய அறநிலையத் துறை என்பது அதற்கு ஒப்புதலை மட்டும் வழங்க வேண்டியதுதான் பாக்கி. ஆனால், ஒப்புதலை வழங்குவதற்கு காலதாமதம் செய்கின்ற காரணத்தினாலே, பல இடங்களிலே கோயில் கும்பாபிஷேகம் நடைபெற முடியாமல் போய்விடுகிறது. உதாரணத்திற்கு, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்கு உட்பட்ட . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, கொஞ்சம் இருங்கள். நீங்கள்* zero hour–*ல் இந்தமாதிரி பிரச்சினையை* raise *பண்ணுவது என்பது விதிகளுக்கு முரணானது.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *நான் தகவல்கோரல் என்ற முறையில் எழுப்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தகவல் கோரல் என்ற முறையிலும் நாங்கள் உங்களைப் பேச அனுமதிக்க முடியாது.*

நீங்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான பிரச்சினை என்று கேட்டால் நான் அனுமதிப்பேன்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: *என்னுடைய தொகுதிப் பிரச்சினைதான், முக்கியமானதுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக இந்த மாதிரி பிடிவாதமாகப் பேச வேண்டும் என்பது மிகவும் தவறு. நான் இன்றைக்கு மட்டும் நீங்கள் பேச அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள். சரி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட திருக்கண்ணபுரத்தில் இருக்கக்கூடிய அருள்மிகு சவுரிராஜ பெருமாள் கோவிலுக்கு திருப்பணியைத் தொடங்கி அங்கே குடமுழுக்கு நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் உங்களுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை சொல்கிறபோது இதற்கான பதிலை அப்போது வழங்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் (குறுக்கீடு) ஒன்றுமில்லையா? நன்றி, அவ்வளவுதான்.*

6. கவன ஈர்ப்பு

(அ) எழும்பூர், 104–வது வார்டு, கங்காதீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*